**<u>மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்</u>**

**<u>ந.க.எண். 28 /ஒபக / 2021, நாள் : 31.08.2021</u>**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் – 2021–22ஆம் நிதியாண்டு– பள்ளி அளவில் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு (Safety & Security at School Secondary) – பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்துதல் – வழிகாட்டுதல்கள் மற்றும் நிதி விடுவித்தல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்திட்டம் சென்னை–6 அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.451/C6/SS/S&S /2021, நாள்.21.08.2021.

------

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளுக்கிணங்க ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, 2021–22ஆம் கல்வி ஆண்டிற்கான திட்ட ஏற்பளிப்புக் குழு ஒப்புதல் அறிக்கை (PAB Minutes) இதுவரை பெறப்படாத நிலையில் பார்வையில் காணும் Appraisal Report – இல் உள்ளபடி, Quality Component – Safety & Security at school level (Secondary) என்ற தலைப்பின்கீழ் பள்ளி அளவில் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காக நிதி ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பரிந்துரையில், 367 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு (Secondary) பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளை கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிக்காக பள்ளி ஒன்றுக்கு ரூ.2000/– வீதம் மொத்தத் தொகை ரூ. 734000/– நிதி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன் உயரிய நோக்கம், உலக அளவில் கோவிட்–19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான தற்போதைய சூழலில், மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி பள்ளிக்கு வருவதை உறுதிப்படுத்துவதும், மகிழ்வுடனும், பாதுகாப்பு உணர்வுடனும், கல்வி கற்கும் சூழலை மாணவர்களிடையே ஏற்படுத்துவதும் ஆகும்.

தற்போதுள்ள கோவிட்–19 பெருந்தொற்று அச்சுறுத்தல் காரணமாக, 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பயிலும் அனைத்து 366 அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மட்டும், வரும் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படவுள்ள நிலையில், மாணவர்களின் பாதுகாப்பு கருதியும், பள்ளி வளாகம், வகுப்பறைகள் மற்றும் மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் கழிவறைகள் போன்றவற்றை கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணியின் அவசியம் கருதியும் முதற்கட்டமாக, பள்ளி ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 366 பள்ளிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகள் மேற்கொள்ள வேண்டியவை (பள்ளி திறப்பதற்கு முன்):

1. பள்ளிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டவுடன் தலைமை ஆசிரியர்கள் SMC/SMDC உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி பள்ளிகளையும், வகுப்பறைகளையும் மற்றும் மாணவர்களின் கைகளை கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிக்குத் தேவையான, கொள்முதல் செய்ய வேண்டிய பொருள்கள் எவை என்பதையும் அதன் அளவினையும் முடிவு செய்து தீர்மானம் இயற்ற வேண்டும்.
2. தீர்மானத்தின் அடிப்படையில் பொருள்களை விதிமுறைகளை பின்பற்றிக் கொள்முதல் செய்து அவற்றை பள்ளி இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
3. கொள்முதல் செய்த பொருள்களைக் கொண்டு பள்ளி வளாகம், வகுப்பறைகள் மற்றும் மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களான கழிவறைகள் போன்றவற்றை, பள்ளிகள் திறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
4. இதற்காக ஒரு பொறுப்பு ஆசிரியரை நியமித்து தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்பார்வையிடச் செய்ய வேண்டும்.
5. பள்ளி திறப்பதற்கு முன்பு மேற்காண் பணிகள் அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெற்றதை CEO/DEO/BEO/ADPC/APO/EDC/BRTE உள்ளிட்டக் களஅலுவலர்கள் ஆய்வு செய்வர்.

பள்ளிகள் திறந்த பின்:

1. பள்ளிகள் திறந்த பிறகு, கோவிட்–19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான சூழலில், நோய்த் தொற்று பரவாமல் இருக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மேற்கொண்டு, மாணவர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும்.
2. கோவிட்–19 குறித்து, அரசின் சுகாதாரத்துறை வாயிலாக வழங்கப்படும் வழிக்காட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

மேற்காணும் வழிகாட்டுதல்கள் மற்றும் அனைத்து நடைமுறைகளையும் முறையாக பின்பற்றுமாறு அனைத்து தலைமையாசிரியர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்–9.

பெறுநர் :

அனைத்து அரசு / நலத்துறை / நகராட்சி / மாநகராட்சி / உயர்
மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் :

1. மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. முதன்மைக்கல்வி அலுவலர்கள்– இராணிப்பேட்டை, திருப்பத்தூர்
3. மாவட்டக்கல்வி அலுவலர்கள்–அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
4. அலுவலக கோப்பிற்கு.